Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

**SESSIONS CASE NO.89/2022**

Deposition of PW5 — Witness for Defence

Defence Court

Name :S.Vinoth — Caste:

Father's Name :Selvaraj — Calling :

Village : — Religion:

Taluk : — Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 01st day of August 2023.

**(A1 to A3 present )**

**முதல் விசாரணை-**

நான் பூந்தமல்லியை அடுத்த புதுசத்திரம் பஜனை கோயில் தெருவில் வசித்து வருகிறேன். 13/12/2020 அன்று நானும் எனது நண்பர் ராமுவும் காலை 06.30 மணியளவில் புதுசத்திரம் பேருந்து நிறுத்தம் அருகே டீ சாப்பிட சென்றோம். அப்போது அங்கு கூட்டமாக இருந்தது. என்னவென்று தெரிந்து கொள்ள நானும் ராமுவும் அங்கு சென்று பார்த்தோம். அங்கு வெள்ளவேடு போலீசார் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது போலீசார் எங்களிடம் 12/12/2020 அன்று இரவு 09.00 மணியளவில் ரவி மகன் அசோக்குமார் அந்த இடத்தில் கொலை செய்யப்பட்டதாக கூறினார்கள். அதன் பேரில் ராஜா, முத்து மற்றும் சதீஷ் ஆகியோரின் மீது அசோக்குமாரின் தாயார் தனபாக்கியம் புகார் கொடுத்ததன் பேரில் விசாரணை நடத்திக்கொண்டிருப்பதாக போலீசார் எங்களிடம் கூறினார். அந்த இடத்தில் போலீசார் பார்வை மகசரும், வரைபடமும் தயாரித்து கொண்டிருந்தார்கள். நானும் ராமுவும் பார்வை மகசரில் சாட்சிகளாக கையொப்பமிட்டோம். அதில் முதலாவதாக இருப்பது ராமுவின் கையொப்பம். இரண்டாவது இருப்பது என்னுடைய கையொப்பம். (அந்த பார்வை மகசர் அ.த,சா.2 ஆக குறியீடு செகய்யப்படுகிறது).

மேலும் போலீசார் அந்த இடத்திலிருந்த இரத்தம் படிந்த மண்ணும் இரத்தம் படியாத மண்ணும் கொலை நடைபெற்ற இடத்தில் உள்ள தார் ரோடிலிருந்து ஒரு மகசரின் கீழ் சேகரித்தார்கள். அந்த மகசரில் நானும் ராமுவும் மகசரில் சாட்சிகளாக கையொப்பமிட்டோம். அதில் முதலாவதாக இருப்பது ராமுவின் கையொப்பம். இரண்டாவது இருப்பது என்னுடைய கையொப்பம். (அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த,சா.3 ஆக குறியீடு செகய்யப்படுகிறது). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

(சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் தரப்புக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டும், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் திரு.பி.தயாளன் ஆஜராகி இருந்தும் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படாததினால் சாட்சியின் சாட்சியம் முடிக்கப்படுகிறது).